## திருத்தம்

### பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

### அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I, II மற்றும் III இற்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை – 2024(II) 2025

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2025.10.10 ஆந் திகதிய 2,458 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் I, II மற்றும் III ஆம் வினைத்திறன்கான் தடைதாண்டல் பரீட்சை - 2024 (II)" பரீட்சை அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

5.0. இப் பரீட்சைக்கான விண்ணப்பங்களை இணையவழி (Online) முறையூடாகவே மேற்கொள்ள வேண்டும். இதற்காக இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.slida.lk இற்குச் சென்று “Apply for Examinations” எனும் இணைப்பை பயன்படுத்தி புதிய விண்ணப்பதாரிகளுக்கு உரிய பரீட்சை விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்தி செய்ய முடியும் விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2026, செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதி வரை நீடிக்கப்படுவதுடன் விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்துவது 2026.08.15 ஆந் திகதி மு. ப. 8.00 மணி முதல் 2026.09.04 ஆந் திகதி நள்ளிரவு 12.00 வரை மட்டுமே மேற்கொள்ள முடியும் இப்பரீட்சையை 2026, நவெம்பர் மாதத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் இதற்கு முன்னர் இப் பரீட்சைக்கு விண்ணப்பம் சமர்ப்பித்த விண்ணப்பதாரிகளுக்கு நேரடியாக http://examinationportal.slida.lk/app/applied-exams எனும் இணைப்பின் ஊடாக முறைமைக்குள் நுழைந்து தம்மால் உருவாக்கப்பட்ட பயனர் கணக்கைப் (User Account) பயன்படுத்தி விண்ணப்பித்த விண்ணப்பப் படிவத்தின் நிலை (Application status) பற்றிய விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தயவுடன் அறியத்தரப்படுகின்றது.

அங்கு விண்ணப்பப்படிவத்தின் நிலை பின்வருமாறு காட்டப்படும் :

(i) Apporved - விண்ணப்பப்படிவம் அங்கீகரிக் கப்பட்டுள்ளதால், மேற்கொண்டு எவ்வித நடவடிக்கையும் எடுக்கத் தேவையில்லை.

(ii) Draft - விண்ணப்பப்படிவத்தில் உள்ள குறை பாடுகள் அல்லது பூர்த்தியாகாத விபரங்களைத் திருத்தி, மீண்டும் சமர்ப்பிக்க (submit) வேண்டும்.

(iii) Reject - விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப் பட்டுள்ளதுடன், முறைமையில் குறிப்பிடப் பட்டுள்ள காரணங்களின்படி.

(a) **பணம் கொடுப்பனவு தொடர்பான பிரச்சினைகள்.**- சரியான கொடுப்பனவு தொடர்பான உறுதிப் படுத்தலை (கொடுப்பனவுப் பற்றுச்சீட்டின் புகைப்படம்), மின்னஞ்சலின் தலைப்பில் (Subject) பெயர் மற்றும் நியமன இலக்கத்தைக் குறிப்பிட்டு (உதாரணம் : ஏ. பி. சி. டி. பெரேரா - CS/DOS/00001), doeb2025@slida.gov.lk என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(b) **தவறான பரீட்சையைத் தெரிவுசெய்து சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்.**- மீண்டும் சரியான பரீட்சையைத் தெரிவுசெய்து புதிய விண்ணப்பப்படிவத்தை முன்னர் பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (உதாரணம் : அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் I உத்தியோகத்தர்கள் III ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையையும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் II உத்தியோகத்தர்கள் II ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையையும், அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III உத்தியோகத்தர்கள் I ஆம் வினைத்திறன்காண் தடைத்தாண்டல் பரீட்சையையும் தெரிவு செய்தல் வேண்டும்.

(c) **பதவி உயர்வு தொடர்பான பிரச்சினைகள்.**- உரிய பதவி உயர்வைப் பெறாத உத்தியோகத்தர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 02/2023 இன் கீழ் விண்ணப்பிக்க முடியாது.

இந்த புதிய விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பிக்கும் நடைமுறையின் போது ஏற்படும் தொழில்நுட்ப பிரச்சினைகள் தொடர்பில், இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் 011-4513368 மற்றும் 011-4513366 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் ஊடாக வினவல்களை மேற்கொள்ள முடியும். இது தவிர பரீட்சை தொடர்பாக வேறு ஏதேனும் விடயங்கள் இருப்பின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களுக்கு அழைப்பினை ஏற்படுத்தி உங்களது பிரச்சினைகளைச் சமர்ப்பிக்கவும்.

- நியமன இலக்கம் CS/DOS/00001-CS/DOS/52500 மற்றும் CS/DOS/A/90000 இற்கும் கூடியவை 011-2673560 (2020.01.01 ஆந் திகதிக்கு முன்னர் இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்)
- நியமன இலக்கம் CS/DOS/52501-CS/DOS/90000 : 011-2684223

  (2020.01.01 ஆந் திகதியன்று மற்றும் அதற்குப் பின்னர் இணைத்துக்கொள்ளப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்)

02. 2,458 ஆம் இலக்க மற்றும் 2025.10.10 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றிச் செல்லுபடியாகும் என்பதுடன், விண்ணப்பப்படிவத்தின் நிலை (Application Status) Approved எனக் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்கள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை என அறிவிக்கப்படுகின்றது.

என்.யூ. நிஷாந்த மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2026, யூலை 31.

08-104